**சர்வதேச தொடர்பு மற்றும் தந்திரோபாய கற்கைகளிற்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகம் - 2011**

---

சர்வதேச தொடர்பு மற்றும் தந்திரோபாய கற்கைகளிற்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 32 ஆம் இலக்க இலங்கை தந்திரோபாய கற்கைகளிற்கான நிறுவக அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்ட 2000 இன் 45 இலக்க தந்திரோபாய கற்கைகள் தொடர்பான இலங்கை நிறுவக அதிகாரச்சட்டத்தின் 10(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது அவதானிப்புகள் மற்றும் கருத்துரைகள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

---

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை

கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை சர்வதேச தொடர்புகள் மற்றும் தந்திரோபாய கற்கைகளிற்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகத்தின் நிலையான வைப்பு வட்டி மற்றும் கேட்போர் கூட வாடகை வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்கான செலவினம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. இங்கு ஒரே நிறுவகத்தல் இரு கணக்கீட்டுக் கொள்கைகள் பின்பற்றப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2006 இன் 32 ஆம் இலக்க தந்திரோபாயக் கற்கைகள் தொடர்பான இலங்கை நிறுவக (திருத்தப்பட்ட) அதிகாரச் சட்டம் 10உ | அதிகாரச்சட்டம் அமுலாக்கப்பட்ட திகதியில் இருந்து அமுலாக்கப்படும் வகையில் பண்டாரநாயக்க சர்வதேச தூதுவர் பயிற்சி நிறுவகம் (பீஜடீரீஜ) இந் நிறுவகத்திற்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போதும் அதிகாரச்சட்டத்தின் |

| | | |
|---|---|---|
| | (I), (2)(I) மற்றும் (II) ஆம் பிரிவுகள் | பிரகாரம் அப் பயிற்சி நிறுவகத்தால் பேணப்பட்டு வரும் கணக்குகளில் உள்ள பணம் இந் நிறுவகத்தின் நிதியத்திற்குச் செலவு வைக்கப்படாது அல்லது அப் பயிற்சி நிறுவகத்தின் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் இந் நிறுவகத்தின் ஊழியர்களாக ஈடுபடுத்தப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், நிறுவகத்தின் சொத்துக்களும் பொறுப்புகளும் கையேற்கப்பட்டும் இருக்கவில்லை. |
| (ஆ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு வருமான அதிகாரச்சட்டம் | மாதாந்த சம்பளம் ரூபா 75,000 தொகையான ஒரு உத்தியோத்தரின் சம்பளத்திலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சி கள் சுற்றிக்கையின் | |
| | (i) 9.2 ஆம் பந்தி | அமைப்பு வரைபடத்துடன் சேர்த்து ஒன்றிணைக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 9.3.1 ஆம் பந்தி | பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுத் திட்டங்களை நிறுவகம் தயாரித்திருக்கவில்லை. |

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி மீளாய்வு

#### 3.1.1 நிதி விளைவுகள்

2011 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் செயற்பாடுகளின் விளைவுகள் ரூபா 563,642 பற்றாக்குறையானதுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டில் ரூபா 2,308,847 மிகை காணப்பட்டமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,872,489 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக

மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 2.3 மில்லியன் தொகையால் குறைவடைந்தமை இவ் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகக் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் விசேடமாக அரச பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு, சட்டங்கள், பொருளியல், கலாச்சார தொடர்புகள், விவசாய மற்றும் சுற்றாடல் உள்ளடங்கலாக இலங்கையின் உபாயமார்க்கம் தொடர்பான கல்வி மற்றும் இலங்கையின் சர்வதேச தொடர்புகளின் மேம்படுத்தலுடன் இதற்கு மேலதிகமாக சமாதானத்தை மேம்படுத்தல் மற்றும் பின்விளைவுகள் தொடர்பான பிரச்சனைகளுக்காக தீர்வினைப் பெறுவதில் ஈடுபடும் மற்றும் துறைகளில் ஆய்வுகளுக்கு உதவுவதுடன் அத் தரப்பினரைப் பயிற்றுவித்தல் ஆகிய பல்வேறு பயிற்சி ஆராய்ச்சி நிறுவகமாக செயற்படுவது நிறுவகத்தின் நோக்கான போதிலும் மீளாய்வாண்டின் போது அத்தகைய துறைகளுக்குரித்தான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டு திறமையீனங்கள்

மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 573,199 பெறுமதியான பொருட்கள் தொடர்பில் விலை மனுக்கள் கோரப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்புப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் 6:5:1 ஆம் பிரிவின் பிரகாரம், கணக்காண்டு பூர்த்தியடைந்து 60 நாட்களுக்குள் ஆண்டின் நிதியறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கு உரித்தான நிதிக்கூற்றுக்கள் 2015 பெப்ரவரி 11 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் 5:1:1 ஆம் பந்தியின் படி நிறுவகம் தாபிக்கப்பட்ட நோக்கத்தை எய்துவதற்கு 03 ஆண்டுகளுக்குக் குறைவற்ற காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு மீளாய்வாண்டிற்காக நிறுவகத்தின் இலக்குகளை எய்துவதற்கான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5 வருடாந்த அறிக்கை பிரசுரித்தல்**

2007 ஆம் ஆண்டு முதல் இது வரை வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மீதான குறைபாடுகள் காலத்திற்குக் காலம் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு எனது அறிக்கையின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாடு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பதவியணி
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) செயல்நடவடிக்கை திட்டம்